**தமிழ்நாடு மின்கழகக் கணக்காயர் களத்தொழிலாளர் சங்கம்**
**பதிவு எண் - 2472 அங்கீகாரம் பெற்றது.**
**தலைமை இடம் - சென்னை.**

| | | |
|---|---|---|
| **K.சந்திரசேகரன்** | **R.சந்திரசேகரன்.** | **E.சித்தையன்** |
| **தலைவர்** | **பொதுச்செயலாளர்** | **நிதிச்செயலாளர்** |

**சுற்றறிக்கை எண்:10-2018** **20-07-2018**

அன்புடையீர்,

வணக்கம். நமது சங்கத்தின் 63வது மாநிலப் பொதுக்குழு கடந்த 15-07-2018 அன்று கடலூரில் விமரிசையாக நடை பெற்றது. பொதுக்குழுவினை முன்னின்று நடத்திய திரு.P. அன்பழகன், இணைச் செயலாளர், திரு. வேங்கடபதி, மண்டலச் செயலாளர் மற்றும் கடலூர் வட்டப் பொறுப்பாளர்களுக்கும், தொழிலாளர்களுக்கும் மத்திய சங்கத்தின் சார்பில் பாராட்டினையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

திரு.P. அன்பழகனின் வரவேற்புரையுடன் துவங்கிய பொதுக்குழுவில், சங்கத் தலைவர் திரு.K. சந்திரசேகரன், அவர்கள் தலைமையுரையாற்ற, திரு.E. சித்தையன், நிதிச் செயலாளர் அவர்கள் 2016 மற்றும் 2017 ம் ஆண்டுகளுக்கான வரவு – செலவு கணக்குகள் படித்து ஒப்புதல் பெற, பொதுச் செயலாளர் சிறப்புரையாற்றினார்.

2018 – 2019 ம் ஆண்டுக்கான பொறுப்பாளர்கள் தேர்தலை நடத்திட தேர்தல் ஆணையர் நியமனத்தில் பொறுப்பாளர்களுக்குள் கருத்து வேறுபாடு ஏற்பட்டு மதியம் 3.00 மணிவரை சமரசத்துக்கு வர முடியாததால் தேர்தல் 3 மாதங்களுக்கு தள்ளிவைப்பது என தீர்மானிக்கப்பட்டது.

பின்னர் கீழ்காணும் பிரச்சனைகள் மீது ஒரு மனதாகத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. 2018 – 2019 ம் ஆண்டுகளுக்கான வட்டக்குழுத் தேர்தலை 31-03-2018 க்குள்ளும், மண்டலத் தேர்தலை 31-04-2018 க்குள் முடிக்காமல் தாமதமாக நடத்திய வட்ட, மண்டல தேர்தல்களை அங்கீகரித்தல்.
2. நிதிச்செயலாளரால் முன்வைக்கப்பட்ட 2016 மற்றும் 2017 ம் ஆண்டுகளுக்கான வரவு செலவு கணக்கு ஒப்புதல்.
3. 2017 ம் ஆண்டிற்கான வரவு செலவு கணக்கில் ரூ. 3.21 லட்சம் வழக்கு செலவுக்கு தணிக்கையாளர் குறிப்பின் படி பொதுக்குழுவின் ஒப்புதல்.
4. 22-02-2018 அன்று வாரிய நிர்வாகத்திற்கும் தொழிற்சங்கங்களுக்குமிடையே ஏற்பட்ட ஊதிய உயர்வு மற்றும் வேலைபளு ஒப்பந்தத்தில் நமது சங்கம் கையொப்பமிட்டதற்கு ஒப்புதல்.
5. 22-02-2018 அன்று ஏற்பட்ட ஊதிய உயர்வு மற்றும் வேலைபளு ஒப்பந்தம் பத்தி VIII ல் குறிப்பிடப்பட்டிருக்கும் 21 கோரிக்கைகளில் 11 கோரிக்கைகள் மீது உத்திரவு வழங்கிய வாரிய நிர்வாகத்திற்கு நன்றி தெரிவித்தல். மீதமுள்ள 10 கோரிக்கைகள் மீது விரைவில் நடவடிக்கை எடுக்க வலியுறுத்தல்.
6. வேலைபளு ஒப்பந்தத்திற்கு உட்படாத மத்திய அலுவலகங்களில் பணிப்பகிர்வு மற்றும் பணியாளர் எண்ணிக்கை குறித்து தொழிற்சங்கங்களுடன் பேசி சுமூக முடிவெடுத்திட வேண்டியது குறித்து வாரிய நிர்வாகத்தின் கவனத்திற்கு கொண்டுவருதல்.
7. நிலுவையில் உள்ள 11 கோரிக்கைகள் பட்டியலிட்டு அதன் மீது நிர்வாகம் தீர்வுகாண வற்புறுத்தல்.
8. வேலைபளு காரணமாக வழங்கப்படும் கூடுதல் பொறுப்புகளுக்கு எதிராக வழங்கப்படும் பதவி உயர்வுத் தேதியை 01-01-2016 என கணக்கிடல்.
9. சங்க நிதி ரூ.10 லட்சத்திற்கு மேல் சேருவதை வங்கியில் முதலீடு செய்தல்.
10. சங்கத்தின் பல்வேறு சிறப்பு பணிகள் செய்திட பொறுப்பாளர்கள் நியமனம், பொதுநலநிதி, ஒழுங்கு நடவடிக்கை, கல்வி, இளைஞர் அணி மற்றும் மகளிர் அணி குழுக்கள் அமைக்கும் பணி அடுத்த மாநில செயற்குழுவில் மேற்கொள்ளுதல்.

இறுதியாக திரு. N. பெரியசாமி, துணைத்தலைவர் நன்றி கூற கூட்டம் மாலை 5.00 மணியளவில் இனிது முடிந்தது.

கடந்த 16-07-2018 அன்று மதியம் 2.30 மணி முதல் 3.00 மணிவரை மின்வாரியத்துடன் 1. சம்மேளனம், 2. நமது சங்கம், 3. தொழிலாளர் முன்னேற்றச் சங்கம், 4. ஐ.என்.டி.யூ.சி. 5. ஜனதா, 6. ஐக்கிய சங்கம், 7. பொறியாளர் சங்கம் ஆகிய சங்கங்கள் கீழ்கண்ட பிரச்சினைகள் குறித்துப் பேச்சுவார்த்தை நடத்தினோம்.

1).வேலைபளு ஒப்பந்தப்படி கூடுதல் பொறுப்புகள் அனுமதிப்பது. 2)156 ATO பதவி உயர்வை துரிதப்படுத்துவது. 3)19 RIS பதவிகளுக்கு அனுமதி. 4)2000 LI பொறுப்புகளை

174 கோட்டங்களுக்கு சமமாகப் பிரிப்பது. 5)383 Spl.Gr.FM அனுமதி. 6)புதிய மின்நிலையங்களில் JE II அனுமதி. 7) 115 TA அனுமதி. அனைத்துப் பிரச்சினைகளிலும் விரைவில் தீர்வு காண உடனிருந்த JMD, SECY, CE/P ஆகியோருக்கு வாரியத் தலைவர் உத்திரவிட்டார்.

மேலும், 3 ஆண்டு கால மாறுதலில் ஒரு ஆண்டுக்குள் ஓய்வு பெறுபவர்கள், மாற்றுத் திறனாளிகள் முதலியவர்களுக்கு விதிவிலக்களிக்க கேட்டுக் கொண்டோம். சங்கங்களின் கோரிக்கையை ஏற்று கீழ்கண்ட விதிவிலக்குகளை நிர்வாகம் 18.07.2018ல் அறிவித்துள்ளது.

1).Physically Challenged Persons. 2)Employees due to retire on or before 31.03.2019.

3).State Officers viz. the President, Secretary and Treasurer of the Registered Unions.

4).Circle Secretaries of Registered Unions.

ஓய்வு பெறுபவர்களுக்கு அளிக்கப்படும் விதிவிலக்கை உத்திரவு வழங்கும் நாளிலிருந்து ஓராண்டுக்குள் (31.07.2019க்குள்) என்று திருத்திட வேண்டும் என்றும்,

110 KVSS லும், Upgraded Section லும் பணிபுரிபவர்கள் பொதுமக்கள், மின்நுகர்வோர் தொடர்புக்கு அப்பால் இருப்பதால் அவர்களுக்கும் விதிவிலக்க வேண்டும் என்றும் கோரிக்கை வைத்துள்ளோம்.

19.07.2018 அன்று முற்பகல் 12.00 மணியளவில் இயக்குநர்/உற்பத்தி அவர்களை சந்தித்து, 1)M.T.P.S பணி நேரம் மாற்றி அமைப்பது குறித்து நினைவுபடுத்தினோம். ஏற்கெனவே இது பற்றி அலுவலர்களிடம் பேசிவிட்டதாகவும் ETPS, NCTPS,TTPS போல பணிநேரம் மாற்றி அமைக்கப்படும் என்று கூறினார்.

2)E.T.P.S ல் LIக்கு சமமான பதவிகளுக்கு 92பேருக்கு பதவி உயர்வு வழங்கிட 10.8.2017ல் பேனல் தயாரிக்கப்பட்டு 57 பேருக்கு ஏற்கனவே பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. தற்போது 45 காலிப் பொறுப்புகள் இருப்பதால் பேனலில் மீதமுள்ள 35 பேருக்கு 9.8.2018ல் பேனல் காலம் முடிவடைவதற்குள் பதவி உயர்வு வழங்கிடக் கேட்டுக் கொண்டோம்.

நமது கோரிக்கையை ஏற்றுக் கொண்ட இயக்குநர்/உற்பத்தி அவர்கள் ETPS நிர்வாகத்தை தொலைபேசியில் அழைத்து உடனடியாக பதவி உயர்வு வழங்கும் நடவடிக்கையை மேற்கொண்டிட உத்திரவிட்டார்.

அடுத்து 12.30 மணியளவில் வாரியச் செயலாளரைச் சந்தித்து கீழ்கண்ட பிரச்சினைகள் பற்றி பேசினோம்.

1. வருவாய் பிரிவில் மின் இணைப்புகள் எண்ணிக்கையை முடிவு செய்ய குழு அமைப்பது.
2. Assistant Programmer களுக்கு அடுத்த பதவி உயர்வு வரிசைகள்.
3. தூத்துக்குடி மின் விநியோக வட்ட சங்க அலுவலகத்திற்கு மின் இணைப்பு.
4. வேலை பளுவிற்குட்படாத மத்திய அலுவலகங்களில் பணிப்பகிர்வு மற்றும் பணியாளர் எண்ணிக்கை.

முதல் 2 பிரச்சினைகளில் நடவடிக்கையை விரைவுபடுத்துவதாகவும், சங்க அலுவலகத்திற்கு மின் இணைப்பு கொடுக்க மேற்பார்வை பொறியாளர்/தூத்துக்குடிக்கு உத்திரவிடப்படும் என்றும், மத்திய அலுவலகப் பணிப்பகிர்வு பிரச்சினை பற்றி தலைமைப் பொறியாளர்/ஈரோடு அறிக்கையின் மீது இன்னும் சில தினங்களில் வாரிய உயர் அலுவலர் கூட்டத்தில் விவாதிக்கப்படவுள்ளதாகவும், இம்மாத இறுதிக்குள் தொழிற்சங்கங்களுடன் முதல் சுற்றுப் பேச்சுவார்த்தைக்கு திட்டமிட்டுள்ளதாகவும் செயலாளர் தெரிவித்தார்.

வாரியத்தலைவர், இயக்குநர் / உற்பத்தி மற்றும் வாரியச் செயலாளருடன் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் எனக்குத் துணையாக உதவிப்பொதுச்செயலாளர் திரு. T.தயாளன் கலந்து கொண்டார்.

15-07-2018 அன்று கடலூரில் நடைபெற்ற 63வது மாநிலப் பொதுக்குழு தீர்மானம் எண் 9ன்படி ரூ.7லட்சத்தை ஐ.ஓ.பி அண்ணாசாலை கிளையில் 5 ஆண்டுக்கு நிரந்தர வைப்புநிதியாக இன்று முதலீடு செய்யப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

மத்திய சங்கப் பொறுப்பாளர்கள் தேர்தலை விரைவில் சுமூகமாக நடத்திட தேவைப்படும் ஆலோசனைகளை மேற்கொள்வதற்கு எதிர்வரும் 11-08-2018 அன்று சென்னையில் சங்கத்தின் உயர்மட்டக்குழு கூட்டத்திற்கு ஏற்பாடு செய்துள்ளோம்.

அனைவருக்கும் நல்வாழ்த்துக்கள்.

தோழமையுள்ள,

பொதுச்செயலாளர்

பெறுநர் : கிளைச்செயலாளர்கள், கோட்டச்செயலாளர்கள்,வட்டச்செயலாளர்கள், வட்டத்தலைவர்கள், மண்டலச்செயலாளர்கள், மத்திய சங்க பொறுப்பாளர்கள்.

நகல் : செய்திமடல்